1984 மார்ச் 5]

திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கரும்புப் பயிரைத் தாக்கும் குருத்துப் பூச்சியை ஒழிக்க புதிய திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்தப் புதிய திட்டத்தோடு, உற்பத்திக்கு ஏற்றாற்போல் விலை கொடுப்பதோடு, அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்ப எந்த மாதங்களில் இந்தப் பயிரை செய்யலாம், எப்படி செய்யலாம் என்பதையெல்லாம் அறிவிப்பதோடு, அந்தந்த மாவட்டத்திற்கு ஏற்ப நிலைமையை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இந்தக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டுதான் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

கட்டிடத் தொழிலாளர்கள் அரசிடம் கொடுத்துள்ள கோரிக்கைகள்.

(164—*வினா எண் 9805) திரு. ரா. கிருஷ்ணன், திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள கட்டிடத் தொழிலாளர்கள் பல கோரிக்கைகளை அரசிடம் கொடுத்துள்ளனரா ?

(ஆ) அதன் மீது அரசின் நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) ஆம்.

(ஆ) ஒரு விவர அறிக்கை ** அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுகூட சமீபகாலத்தில், இந்தக் கட்டிட தொழிலாளர்கள் பல்வேறு சங்கங்களை ஒருங்கிணைத்து, பல்வேறு வகையான போராட்டங்களை நடத்தி, அரசுக்கு ஒரு மகஜரைக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுடைய கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் அனுப்பியுள்ள கோரிக்கைகள் எத்தனை? அதிலே அரசாங்கம் உடனடியாக நிறைவேற்றிய கோரிக்கைகள் எத்தனை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

** 267-269ம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பெற்றுள்ளது.

[1984 மார்ச் 5

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட சங்கங்கள் கொடுத்த கோரிக்கைகளில் முக்கியமானவை 14. அதிலே 4 தான் இந்த இலாகாவைச் சார்ந்தது. இந்த அரசைப் பொறுத்தவரையில் 1983ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டிடக் கட்டுமான பணியாளர்கள் பணி நிலைமைகள் பல்வகை விதிமுறைகளை உருவாக்கி சட்ட முன்வடிவை அறிமுகம் செய்திருக்கிறோம். அதை அறிமுகம் செய்யும்போது, நான் சென்ற சட்டமன்ற தொடர்க்கூட்டத்தில் இதைப்பற்றிச் சொன்னேன், இந்தக் கூட்டத் தொடரில் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதாக இல்லையென்று. காரணம் இதிலே பல திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது இன்ஷூரன்ஸ் கவரேஜ் போன்ற பல திருத்தங்கள் செய்ய வேண்டும். பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். சுப்ரீம் கோர்ட் ஜட்ஜ் வி. ஆர். கிருஷ்ண அய்யர் அவர்களும் இருக்கிறார்கள். அப்பேற்பட்டவர்கள் கருத்து சொல்வதாக இருக்கிறார்கள். இவைகளையெல்லாம் பரிசீலனை செய்து, அரசே திருத்தங்கள் கொண்டு வருவதாக இருக்கிறது. அடுத்து வருகிற சட்டமன்ற பட்ஜட் தொடர் கூட்டத்தில் நாம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னேன். இப்போது அது ஆய்வுக்கு எடுத்துக் கொண்டு, நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கிறேன். அப்போது விரிவான விவாதத்தை வைத்துக் கொள்ளலாம்.

திரு. பெ. சு. திருவேங்கடம்: பேரவைத் தலைவர் அவர்களே, நடப்பு சட்டமன்றக் கூட்டத்தில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதாகச் சொன்னார்கள். நன்றி. ஆனால் அவர்கள் கொடுத்த 14 கோரிக்கைகளில் 4 கோரிக்கைகள் தான் அந்த துறையைச் சேர்ந்தது என்று சொன்னார்கள். அந்தப் பத்துக் கோரிக்கைகளையும்—எந்தத் துறையைச் சார்ந்ததாக இருந்தாலும்—அரசாங்கம் பரிசீலனை செய்து நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கிறது. ஆகவே அவற்றையும் சேர்த்து ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள நம்முடைய அமைச்சரவர்கள் முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட இலாக்காக்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

1984 மார்ச் 5]

திரு. என். வரதராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, கட்டிடத் தொழிலாளர்களின் கோரிக்கையானது கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாக தள்ளிப் போடப்பட்டு வந்துள்ளது. இந்தக் கூட்டத் தொடரில் அவர்களின் பாதுகாப்புக்கான சட்டம் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று நினைக்கிறேன் என்று சொன்னார்கள். அது ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? குறிப்பாக நீண்ட காலமாக அவர்களது முக்கியமான கோரிக்கையாக இருப்பது அனைத்து கட்டிடங்களிலும் வேலை பார்க்கும் தொழிலாளர்களுக்கும் இந்தப் பாதுகாப்பு இருக்க வேண்டும் என்பதாகும். அதற்கு இந்தச் சட்டம் பொருந்துமாறு செய்யப்பட வேண்டும். அவர்களுடைய அடுத்த முக்கியமான கோரிக்கை கூலி நிர்ணயிக்கப் பெறவேண்டும் என்பதாகும். அது நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் வரதராஜன் அவர்கள் ஒரு நல்ல கருத்தைச் சொன்னார்கள். முப்பத்தைந்து ஆண்டு காலமாக புறக்கணிக்கப்பட்டு வந்த கட்டிடத் தொழிலாளர்கள் சமுதாயத்தைப் பாதுகாக்க புரட்சித் தலைவர் ஆட்சியில் முயற்சி எடுத்துக்கொண்டதற்காக மாண்புமிகு உறுப்பினர் பாராட்டுவார்கள் என்று நினைக்கிறேன். நிரம்பப் பாராட்டுதல்கள், சட்டம் ஆய்வுக்கு வரும்பொழுது கிடைக்கும் என்பதை நான் அறிவேன். ஏற்கனவே சட்டம் அறிமுகம் செய்தாகிவிட்டது, சென்ற கூட்டத் தொடரிலேயே. இந்த கூட்டத் தொடரில் அது ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதாக இருக்கிறோம். இருப்பினும், கொஞ்சம் காஷியஸ் ஆக எடுத்துக் கொள்ளப்படலாம் என்று தெரிவித்தேன். அந்தத் தொழிலாளர்களுக்கு கூலி நிர்ணயம் சென்ற ஆண்டு (1983 ஜூலை) முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தொழிலாளர் இலாக்காவில் நியமிக்கப்பட்டுள்ள மருத்துவ அதிகாரிகள்.

165—(*வினா எண் 14825)—திரு. கு. ரமணி: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தொழிற்சாலை ஆய்வாளர் கட்டுப்பாட்டின் கீழ் தொழிலாளர் இலாக்காவில் மருத்துவ அதிகாரிகள் ஏழு பேர்கள் நியமிக்கப்பட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள வேலைகள் என்ன?

(இ) இந்த மருத்துவ அதிகாரிகளை மாவட்ட மருத்துவ அதிகாரிகள் மேற்பார்வையிடும் பொறுப்புண்டா?